## நில அளவைச் சபை – 2016

-------------------------------------------

நில அளவைச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவைச் சபை அதிகாரச்சட்டத்தின் 57(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நில அளவைச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1 இன் 45 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கீட்டு மென்பொருட்கள் கற்பனைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டு கொள்கைகள்

ஊழியர் பணிக்கொடை தொடர்பாக சபையினால் கணக்கீட்டுக் கொள்கையொன்று இனங்காணப்படாதிருந்ததுடன், ஊழியர் பணிக்கொடைக்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 547,944 கூட்டுத்தொகையான இயந்திரங்கள், தளபாடங்கள், கணனி உப பாகங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பவற்றிற்காக பட்டோலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.4 தொங்கல் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 8,820 தொகையான தொங்கல் கணக்கின் மீதி 03 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவை அதிகாரச்சட்டம் | |
| (i) 12(1) ஆம் பிரிவு | பதிவு செய்யப்பட்ட அனுமதிப் பத்திரத்தையுடைய நில அளவையாள ரொருவரால் தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட குறித்த வகைகளில் ஆரம்ப திட்ட வரைபடம் அல்லது வரைபடத்தின் பிரதிகள் நில அளவையாளருக்கு தரவுத் தளமொன்றை தாபிப்பதற்காக வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 43(1) மற்றும் (2) ஆம் பிரிவு | சபையினால் சகல பதிவுசெய்யப்பட்ட அனுமதிப்பத்திரத்தையுடைய நிலஅளவை யாளர்களின் பெயர்பட்டியலொன்றை வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் பதிவு செய்யப்பட்ட அனுமதிப்பத்திரத்தையுடைய 1,031 நிலஅளவையாளர்கள் இருந்தும், 2016 மார்ச் 30 ஆந் திகதிய 1960/29 ஆம் இலக்க வர்த்தமானியில் 943 பேரின் பெயர்கள் மாத்திரம் வெளியிடப்பட்டிருந்தன. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் சபையின் நிதி விளைவுகள் ரூபா 834,430 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 732,669 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 101,761 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் மொத்த வருமானம் ரூபா 414,573 ஆல் அதிகரித்திருந்த போதிலும், ஏனைய வருமானம் 328,892 ஆலும் தபால் மற்றும் தொடர்பாடல் செலவினம் ரூபா 103,526 ஆலும் ஏனைய செலவினம் ரூபா 114,665 ஆலும் அதிகரித்தமை மேற்படி வீழ்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை தளம்பலுடன் கூடிய நிதி மிகையொன்று காண்பித்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது அது ரூபா 834,430 ஆன பற்றாக்குறையொன்றாக மாறியிருந்தது. எவ்வாறாயினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற் கொள்ளும் போது 2011 ஆண்டின் போது ரூபா 2,471,638 ஆன பங்களிப்பு தளம்பலுடன் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 2,791,615 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

அளவை தொழில் மற்றும் அதன் பிரயோகம் என்பவற்றை முறையாக பேணிச் செல்வதாகவும், தொழில்துறையினர் எதிர்பார்க்கும் தொழில்நுட்ப ஒழுங்குகள் மற்றும் நெறிமுறைகள் நியமங்களுக்கு இணங்கும் வகையில் பயிற்சியொன்றோ அல்லது கல்வியோ தொழில்துறையில் நுழைபவர்களுக்கு கிடைப்பதாகவும் அதனால் தொழில்துறையில் ஈடுபடுபவர்களினால் தொழிலின் நிலைத்திருதன்மை உயர் நியமங்களை பேணிச் செல்வதனையும் உறுதிப்படுத்தல் 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவைச் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சபையின் நோக்கங்களாகும்.

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், கருமங்களை நிறைவேற்றுவதன் செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் தீர்ப்பதற்கு இருந்த மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 136 ஆக இருந்த போதும் ஆண்டின் போது தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் 91 அதாவது 67 சதவீதமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், சபையினால் 6 தொழில்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 03 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

(இ) சுயேட்சையான உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்காக சமூக பாதுகாப்பு முன்மொழிவுத் திட்டமொன்றறை தாபித்தல், நலன்புரி மற்றும் விளையாட்டு வசதிகள் வழங்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் நடவடிக்கைகளை நிர்வகிப்பது தொடர்பாக தேவையான விதிகள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அந்நியதியின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(உ) வருடாந்த அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதற்கு உரித்துள்ள சகல நிலஅளவையாளரும் நில அளவை அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும். வருடாந்த அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாமல் நிலஅளவைத் தொழில்துறையில் ஈடுபடும் நபர்களை இனங்காண்பதற்கோ அல்லது அவ்வாறான நடவடிக்கைகளை தடுப்பதற்கோ சபையினால் சட்ட விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

சபையின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டின் பின்னர் நிலஅளவையாளர் ஒருவர் சபையில் பதிவுசெய்யும் போது அறவிடப்படுகின்ற ரூபா 3,500 தொகையான பதிவுக் கட்டணமும் 2010 ஆம் ஆண்டின் பின்னர் வருடாந்த அனுமதிப்பத்திரங்களுக்காக நிலஅளவையாளர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற ரூபா 2,500 தொகையான கட்டணமும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டில் அலுவலக இடவசதிகளை விரிவாக்குவதற்காக அறைகளை பிரித்து வேறாக்குவதற்குரிய ஒப்பந்தத்திற்காக ரூபா 138,582 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. இச்செயற்பாட்டிற்காக பெறுகைகள் வழிகாட்டலிலிருந்து விலகி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், கேள்வி திறக்கப்பட்ட திகதியாக 2016 ஆகஸ்ட 20 (சனிக்கிழமை) என போலியான திகதி குறிப்பிடப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட வருமானங்களையும் செலவினங்களையும் உள்ளவாறான வருமானங்களுடனும் செலவினங்கங்களுடனும் ஒப்பிடும் போது 03 வருமானத் தலைப்புக்களில் 07 செலவின விடயங்களில் 21 சதவீதம் முதல் 247 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 5.2 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்

2009 ஆம் ஆண்டின் சனவரி மாதத்திலிருந்து சபையின் செயலாளர் பதவி வெற்றிடமாக காணப்படுவதுடன் அப்பதவிக்காக உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2012 யூலை 05 ஆம் திகதி பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவால் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் அப் பதவியை நிரப்புவதற்கு கணக்காய்வுத் திகதியான 2017 மார்ச் 31 வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 சமூகப் பொறுப்பை நிறைவேற்றல்

அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர்களால் அளவிட்டு தயாரிக்கப்பட்ட திட்ட வரைபடம் பொது மக்களுக்கு பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அவற்றின் பிரதிகளை நில அளவைச் சபைக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | முறையாக பேரேட்டுக் கணக்குகள் பராமரிக்கப்படாமை காரணமாக கணக்குகளில் தொங்கல் மீதியொன்று காணப்பட்டமை. |
| (ஆ) பெறுகைகள் கட்டுப்பாடு | பெறுகைகள் செயற்பாடுகள் வெளிப்படையாக மேற்கொள்ளப்படாமை. |
| (இ) வருமானக் கட்டுப்பாடு | கட்டணங்கள் திருத்தம் செய்யப்படாமை. |